NDB Elevate – நியதிகளும் நிபந்தனைகளும்

1. NDB Elevate உறுப்புரிமையானது வங்கியினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படும் தகுதிகாண் நியமங்களைப் பூர்த்திசெய்யும் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கப்பெறும்.

2. NDB Elevate இன்கீழ் வழங்கப்படும் நன்மைகள், சிறப்புரிமைகள், அம்சங்கள் மற்றும் சேவைகள் என்பன வங்கியின் பொதுவான நியதி நிபந்தனைகளுக்கும் தொடர்புடைய உற்பத்தி மற்றும் சேவைகளை ஆளும் குறிப்பிட்ட நியதி நிபந்தனைகளுக்கும் உட்பட்டவையாகும்.

3. வங்கியானது NDB Elevate உறுப்புரிமை மற்றும் தொடர்புடைய நன்மைகளை அங்கீகரிப்பதற்கான, மறுப்பதற்கான, இடைநிறுத்துவதற்கான, அல்லது முடிவுறுத்துவதற்கான தனி உரிமையினைக் கொண்டுள்ளது.

4. வாடிக்கையாளர் ஏற்புடையதான தகுதிகாண் நியமங்களை பூர்த்திசெய்யாதிருப்பின், அல்லது வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு NDB Elevate நன்மைகள், சிறப்புரிமைகள் மற்றும் விருப்ப ஒழுங்கேற்பாடுகள் என்பன மீளாயப்படலாம், மீளப்பெறப்படலாம் அல்லது இடைநிறுத்தப்படலாம்.

5. வங்கியானது, அவசியமானதாகக் கருதப்படுகின்றவாறும் கருதப்படும்போதும், ஏதேனும் தகுதிகாண் நியமங்களை, நன்மைகளை, சிறப்புரிமைகளை, அம்சங்களை, சேவைகளை அல்லது இந்நியதி நிபந்தனைகளை திருத்துவதற்கான, மீளாய்வதற்கான, மாற்றுவதற்கான அல்லது இடைநிறுத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

6. அத்தகைய ஏதேனும் மாற்றங்கள் வங்கியின் வலைத்தளம், கிளைகள், நிதிக்கூற்றுகள், இலத்திரனியல் அலைவரிசைகள் அல்லது வங்கியினால் பொருத்தமானதாகக் கருதப்படும் வேறேதேனும் தொடர்பாடல் முறைமைகள் ஊடாக அறியத்தரப்படும்.

7. வாடிக்கையாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய ஏற்புடையதான கட்டணங்கள், அறவீடுகள் மற்றும் கமிஷன்கள் என்பன வங்கியின் நடைமுறையிலுள்ள தீர்வைகள் மற்றும் சேவைக் கட்டணங்களுக்கு இணங்க தொடர்ந்தும் பிரயோகிக்கப்படும்.

8. இந்நியதி நிபந்தனைகள், அத்தகைய திருத்தங்கள் ஏற்புடையதான சட்டங்களினால், இலங்கை மத்திய வங்கி அல்லது வேறேதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அல்லது பணிப்புரைகளினால் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, தன்னியக்கமாக திருத்தப்பட்டனவாகக் காணப்படும்.

9. இந்நியதி நிபந்தனைகள் இலங்கைச் சட்டத்தினால் ஆளப்படுவனவாகவும் அமைத்துருவாக்கப்படுவனவாகவும் காணப்படும்.